## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## <u>O.S.No.78/2022</u>

PW1–முத்தமிழ்செல்வி நாள்.23.02.2026

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு வங்கி கணக்கு உள்ளது. பத்திரம் பதிவதற்கு நான் பணம் தயாராக வைத்திருந்தேன் என்று காட்டுவதற்கு வங்கி கணக்கு விவரம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக தன் கையில் வைத்திருந்ததாக கூறுகிறார். வழக்கு தாக்கல் செய்ததேதியில் மீதி கிரய பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரயபத்திரம் பதிவதற்கு எப்போதும் பணத்தை கையில் தயாராக வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு கிரயஒப்பந்தம் பின்னிட்டு தயார் செய்யப்பட்டதால் தான் என்னால் கைவசம் பணம் இருந்தது என்பதை காட்ட முடியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பத்திர காகிதம் ராஜு செட்டியார் பெயரில் வாங்கப்பட்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பத்திரகாகிதத்தில் 09.12.2020 என்ற தேதியில் அழுத்தி திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பத்திரகாகிதத்தில் முத்திரை தாள் விற்பனையாளர் முகவரி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் என்று குறிப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 3 ஆவண பத்திரகாகிதங்கள் என்பெயரில் வாங்கப்பட்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்பதால் தான் ராஜு செட்டியார் பெயரில் வாங்கப்பட்டதாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் ராஜு செட்டியார் ஒப்பந்தம் செய்திருந்தால் அவர் உயிரோடு இருக்கும்போதே கிரயபத்திரம் எழுதிவாங்க நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.